நியூ சவுத் வேல்ஸ் சுகாதாரத்துறை

மெனிஞ்ஜோகோகல் (Meningococcal) ACWY தடுப்பூசி

பெற்றோர் தகவல் தாள்

தேசிய நோய்த்தடுப்புத் திட்டத்தின் (NIP) கீழ் சில தடுப்பூசிகளை ஆஸ்திரேலிய அரசாங்கம் இலவசமாக வழங்குகிறது.

கே. மெனிஞ்ஜோகோகல் (meningococcal) நோய் என்றால் என்ன?

மெனிஞ்ஜோகோகல் (meningococcal) நோய் ஓர் அரிதான ஆனால் தீவிரமான நோய்த்தொற்று ஆகும். இது பொதுவாக மூளைக்காய்ச்சல் (meningitis) (மூளை மற்றும் தண்டுவட வீக்கம்) மற்றும்/அல்லது சீழ்த் தொற்றை (sepsis) ஏற்படுத்துகிறது.

நோயறிகுறிகளில் பின்வருவன அடங்கும்:

- **திடீர்க் காய்ச்சல்**
- **தலைவலி**
- **கழுத்துப் பிடிப்பு**
- **மூட்டு வலி**
- **சிவப்பு-ஊதா வேனல் கட்டி அல்லது சிராய்ப்புகள்**
- **பிரகாசமான வெளிச்சத்துக்கு உணர்திறன் (sensitivity)**
- **குமட்டல் மற்றும் வாந்தி**

தகுந்த நுண்ணுயிர்க் கொல்லி (antibiotic) சிகிச்சையளித்தாலும் கூட, 10% மெனிஞ்ஜோகோகல் (meningococcal) நோய்த்தொற்றுகள் ஆபத்தானவை. உயிர் பிழைத்தவர்கள் நீண்ட கால சிக்கல்களுடன் விடப்படலாம்.

கே. மெனிஞ்ஜோகோகல் (meningococcal) நோய் எவ்வாறு பரவுகிறது?

மூக்கு மற்றும் தொண்டையிலிருந்து வெளியேறும் உமிழ்நீர் மூலம் மெனிஞ்ஜோகோகல் (meningococcal) பாக்டீரியாக்கள் மக்களிடையே பரவுகின்றன. பொதுவாக முற்றிலும் நன்றாக இருந்து, பாக்டீரியாவைச் சுமந்து செல்லும் ஒரு நபருடன் நெருங்கிய மற்றும் நீண்டகாலத் தொடர்பு கொள்வது பெரும்பாலும் இந்தப் பரவலுக்குத் தேவைப்படுகிறது. 'நெருங்கிய மற்றும் நீண்டகாலத் தொடர்புக்கு' ஒரு எடுத்துக்காட்டு ஒரே வீட்டில் வாழ்வது அல்லது ஆழமான முத்தம். மெனிஞ்ஜோகோகல் (meningococcal) பாக்டீரியா எளிதில் பரவாது அத்துடன் உடலுக்கு வெளியே நீண்ட காலம் வாழாது.

கே. தடுப்பூசிகள் எப்படி வேலை செய்கின்றன?

உங்கள் நோயெதிர்ப்புச் சக்தியானது தொற்றுநோய்களை எதிர்த்துப் போராட தடுப்பூசிகள் உதவுகின்றன. தடுப்பூசி போடப்பட்ட நபர் இந்த நோய்த்தொற்றுகளுக்கு ஆளானால், அவரது நோயெதிர்ப்புச் சக்தியினால் அதை எதிர்த்து நன்றாகப் போராட முடியும், அவ்வகையில் நோயின் வளர்ச்சியைத் தடுக்கிறது அல்லது அதன் தீவிரத்தைக் குறைக்கிறது.

கே. மெனிஞ்ஜோகோகல் (meningococcal) ACWY தடுப்பூசி எவ்வளவு சக்தியுள்ளதாக இருக்கிறது?

மெனிஞ்ஜோகோகல் (meningococcal) ACWY தடுப்பூசியின் ஒரு டோஸ் நான்கு வகையான மெனிஞ்ஜோகோகல் நோய்களுக்கு எதிராக மிகவும் பயனுள்ளதாக இருக்கும் (வகைகள் A, C, W மற்றும் Y). இது B வகை நோயிலிருந்து பாதுகாக்காது.

கே. இந்த தடுப்பூசியை யார் பெற வேண்டும்?

மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும் அனைத்து 10 ஆம் ஆண்டு மாணவர்கள் மற்றும்/அல்லது 15-19 வயதுடையவர்கள் மெனிஞ்ஜோகோகல் (meningococcal) A, C, W மற்றும் Y வகைகளுக்கு எதிராக இந்தத் தடுப்பூசியைப் போட்டுக் கொள்ள வேண்டும்.

கே. இந்த தடுப்பூசியை யார் போடக் கூடாது?

மெனிஞ்ஜோகோகல் (Meningococcal) ACWY தடுப்பூசியைப் பின்வரும் நபர்களுக்குப் போடக்கூடாது:

- **கர்ப்பமாக இருக்கும் அல்லது கர்ப்பமாக இருக்கலாம் எனும் நபர்கள்**
- **மெனிஞ்ஜோகோகல் (Meningococcal) தடுப்பூசியின் முந்தைய டோஸைப் போட்டதற்குப் பிறகு ஒவ்வாமை (anaphylaxis) ஏற்பட்டவர்கள்**
- **தடுப்பூசிச் சேர்க்கைகளில் ஏதேனும் ஒன்றினால் பின்னர் ஒவ்வாமை (anaphylaxis) ஏற்பட்டவர்கள்**
- **இரணஜன்னி தடுப்பு மருந்துக்கு (tetanus toxoid) அதிக உணர்திறன் (hypersensitivity) உள்ளவர்கள்.**

கே. அனாஃபைலாக்ஸிஸ் (anaphylaxis) என்றால் என்ன?

அனாபிலாக்ஸிஸ் (Anaphylaxis) என்பது ஒரு கடுமையான ஒவ்வாமை எதிர்வினையாகும், இது விரைவாக சிகிச்சையளிக்கப்படாவிட்டால் சுயநினைவின்மை அல்லது மரணத்தை ஏற்படுத்தக்கூடும். தடுப்பூசிக்குப் பிறகு இது மிகவும் அரிதானது நோய்த் தடுப்பு மருந்து வழங்குநர்கள், ஒவ்வாமைக்கு (anaphylaxis) சிகிச்சையளிக்கப் பயிற்சி பெற்றுள்ளனர்.

கே. தடுப்பூசிகள் எவ்வளவு பாதுகாப்பானவை?

ஆஸ்திரேலியாவிலுள்ள தடுப்பூசிகள் மிகவும் பாதுகாப்பானவை. சிகிச்சைப் பொருட்கள் நிர்வாகம் (TGA) அவற்றை அங்கீகரிக்கும் முன்னர், அவை கடுமையான பாதுகாப்புச் சோதனைகளில் கட்டாயம் தேர்ச்சியடைய வேண்டும். தடுப்பூசிகளைப் பயன்படுத்திய பிறகும் TGA அவற்றைக் கண்காணிக்கிறது.

கே. மெனிஞ்ஜோகோகல் (Meningococcal) ACWY தடுப்பூசியில் என்ன இருக்கிறது?

தடுப்பூசியில் ட்ரோமெட்டமால் (trometamol), சுக்ரோஸ் (sucrose), சோடியம் குளோரைடு (sodium chloride), சோடியம் அசிடேட் (sodium acetate) மற்றும் நீர் ஆகியவை இருக்கக்கூடும். தடுப்பூசி வேலை செய்ய அல்லது அதைப் பாதுகாக்க இந்தப் பொருட்கள் மிகச் சிறிய அளவில் சேர்க்கப்படுகின்றன.

கே. என் குழந்தை ஏற்கனவே மெனிஞ்ஜோகோகல் (Meningococcal) ACWY தடுப்பூசியைப் போட்டுக் கொண்டிருக்கவில்லை? அதை மீண்டும் போட்டுக் கொள்வது பாதுகாப்பானதா?

மெனிஞ்ஜோகோகல் (Meningococcal) ACWY தடுப்பூசி 12 மாதக் குழந்தைகளுக்கு ஜூலை 2018 முதல் வழங்கப்படுகிறது. உங்கள் குழந்தை இதற்கு முன் மெனிஞ்ஜோகோகல் சி (Meningococcal C) தடுப்பூசியைப் பெற்றிருக்கலாம். அந்த தடுப்பூசி மெனிஞ்ஜோகோகல் சி (Meningococcal C) நோயிலிருந்து மட்டுமே பாதுகாக்கிறது.

சில நாடுகளில், இளம் பருவத்தினருக்கு ஒரு நோயெதிர்ப்பு ஊக்க மருந்தூசி (booster shot) பரிந்துரைக்கப்படுகிறது. இந்த ACWY தடுப்பூசி மெனிஞ்ஜோகோகல் சி (Meningococcal C), அத்துடன் A, W, மற்றும் Y ஆகியவற்றிலிருந்தும் பாதுகாப்பை வழங்குகிறது.

சில உடல்நலப் பிரச்சினைகளைக் (மண்ணீரல் இல்லாமை அல்லது நோயெதிர்ப்புக் குறைபாடு போன்றவை) கொண்டுள்ள சில இளம் பருவத்தினர் ஏற்கனவே இந்த தடுப்பூசியைப் பெற்றிருக்கலாம். அப்படி இருந்தால், உங்கள் குழந்தைக்கு மற்றொரு டோஸ் தேவைப்படுகிறதா என்று விசாரிக்க உங்கள் பொது மருத்துவர் அல்லது சிறப்பு மருத்துவரைப் பார்க்கவும்.

கே. இந்த தடுப்பூசியை வேறு யார் பெற வேண்டும்?

இந்த தடுப்பூசி பின்வருபவர்களுக்குப் பரிந்துரைக்கப்படுகிறது:

- **ஹஜ் போன்ற மெனிஞ்ஜோகோகல் (Meningococcal) நோய்க்கான அபாயம் அதிகம் உள்ள பகுதிகளுக்குப் பயணம் செய்யும் மக்கள்**
- **நுண்ணுயிரியல் ஆய்வக ஊழியர்கள் போன்ற சில தொழிலாளர்கள்**
- **மண்ணீரல் இல்லாதவர்கள் போன்ற மருத்துவப் பிரச்சினைகள் உள்ளவர்கள்.**

கே. மெனிஞ்ஜோகோகல் (Meningococcal) ACWY தடுப்பூசியின் பக்க விளைவுகள் என்ன?

பக்க விளைவுகள் பொதுவாக இலேசானவை. அவற்றில் பின்வருவன அடங்கும்:

- **காய்ச்சல்**
- **தலைவலி**
- **தலைச் சுற்றல்**
- **ஊசி போடப்பட்ட இடத்தில் வலி, சிவந்து போதல் அல்லது வீக்கம்.**

இந்த பக்க விளைவுகள் பொதுவாக 2-3 நாட்களுக்குள் மறைந்துவிடும். தீவிர பக்க விளைவுகள் மிகவும் அரிதானவை.

பக்க விளைவுகள் பற்றிய கூடுதல் விவரங்களுக்கு, health.nsw.gov.au/schoolvaccination என்ற இணையதளத்துக்குச் செல்லவும், மேலும் நுகர்வோர் மருந்துகள் தகவலைப் (CMI) பார்க்கவும்.

பக்க விளைவுகள் பற்றிய கவலை உங்களுக்கிருந்தால், உங்கள் பொது மருத்துவரைத் தொடர்பு கொள்ளவும். அவர்களுக்கு ஏதேனும் கவலைகள் இருந்தால் அவற்றை உள்ளூர்ப் பொதுச் சுகாதாரப் பிரிவுக்கும் தெரிவிக்கலாம்.

கே. எனது குழந்தையின் தடுப்பூசிகள் பற்றிய பதிவை நான் எவ்வாறு பெறுவது?

உங்கள் குழந்தையின் தடுப்பூசி விவரங்கள் ஆஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவேட்டில் (AIR) சேர்க்கப்படும்.

குழந்தைக்கு 14 வயதாகும் வரை பெற்றோர்கள் தங்கள் குழந்தையின் நோய்த்தடுப்பு வரலாற்று அறிக்கையின் நகல் ஒன்றைப் பெறலாம். 14 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய மாணவர்கள் தங்கள் சொந்த பதிவைப் பெறலாம். நீங்கள் அதை பின்வரும் வகையில் அணுகலாம்:

- **my.gov.au இணையதளத்தில் உள்ள உங்கள் மெடிகேர் (Medicare) இணையக் கணக்கு மூலம்**
- **Serviceaustralia.gov.au/express-plus-mobile-apps -இல் உள்ள Medicare Express Plus செயலியைப் பயன்படுத்துவதன் மூலம்**
- **1800 653 809 என்ற எண்ணில் AIR பொது விசாரிப்பு இணைப்பை அழைப்பதன் மூலம்.**